**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :– திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**E.P.No.9/2025 in M.C.O.P.No.109/2011**

1) கோமதி
2) அந்தோணியம்மாள் ... மனுதாரர்கள்/தீர்ப்பு பெற்ற நபர்கள்

–எதிர்–

நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகம்,
மதுரை. ... எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

இம்மனுவானது என் முன்பாக 19.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சோமசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.செந்தில்குமார், அவர்கள் முன்னிலையாகியும், மனுஉரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களையும், வாதுரையையும் பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது G & H காலத்தில் கண்டுள்ள ரூ.7,98,829/–யை எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்யும் பொருட்டு மனுவில் குறிப்பிடப்பட்ட எதிர்மனுதாரர் சொத்தின் மீது சி.பி.சி, ஆர்டர் 21 விதி 11ன் படி ஜப்தி உத்தரவு பிறப்பித்தும், பின்பு அச்சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்து பகிரங்க ஏலத்தில் விட ஏலதேதி குறிப்பிட்டு, ஏலத்தில் விட அனுமதிக்க வேண்டியும், அவ்வாறு ஏலத்தில் விடப்பட்டு கிடைக்கப்பெறும் தொகை மூலம் கிடைக்கப்பெறும் மேற்சொன்ன தொகையை மனுதாரர்கள் வசூல் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டுமாய் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

தாவா நிறைவேறுதல் மனுவானது MCOP.No.109/2011 வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA (MD) No.1579 of 2013 dated 01.03.2023 உத்தரவாணையின் படிதொகையை வசூல் செய்வதற்காக எதிர்மனுதாரர்/தீர்ப்புரை கடனாளி மீது மனு தபசில் கண்ட அசையும் சொத்துக்களை ஜப்தி செய்து அவற்றை ஏலம்விட்டு கிடைக்கும் தொகையை மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டிய தொகைக்கு வரவு வைத்துக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்உரையின் சுருக்கம்**

(1) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனு சட்டப்படியோ அல்லது உண்மைகளின் அடிப்படையிலோ நிலைநிறுத்தத்தக்கது அல்ல. நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையின் கணக்கீடு தவறானது. எங்கள் கழக நிர்வாகம் ஏற்கனவே ரூ.6,78,715/- தொகையைச் செலுத்தியுள்ளது. மேலும், இந்த எதிர்மனுதாரர் கழகம் நீதிமன்றத்தில் தொகையைச் செலுத்துவதற்கு நிதிக் குழு/வாரியத்திடம் ஒப்புதல் பெற வேண்டும், இதற்கு 3 மாதங்களுக்கு மேல் ஆகும். எனவே, மாண்புமிகு நீதிபதி அவர்கள் தீர்ப்புத் தொகையைச் செலுத்த குறைந்தபட்சம் 3 மாத கால அவகாசம் வழங்க வேண்டும் என்று இந்த எதிர்மனுதாரர் கேட்டுக்கொள்கிறார். ரூ.30 லட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள பேருந்து, குறைந்த தீர்ப்புத் தொகைக்காக நீதிமன்ற அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட உள்ளது, இது நியாயமற்றது. மேலும், வழியில் பேருந்துகள் பறிமுதல் செய்யப்படுவதால், பயணம் செய்யும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர், இது மக்களிடையே இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு எதிராகப் புகார்களை ஏற்படுத்துகிறது. இதனால் இந்த எதிர்மனுதாரர் கழகத்திற்கும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

**4)** இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் கோரிய பரிகாரத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

அசல் நிறைவேறுதல் மனுவானது MCOP.No.109/2011ல் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு மற்றும் உத்தரவாணையின் படியும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CMA (MD) No.1579 of 2013 dated 01.03.2023 படி தொகையை வசூல் செய்வதற்காக எதிர்மனுதாரர்/தீர்ப்புரை கடனாளி மீது மனு தபசில் கண்ட அசையும் சொத்துக்களை ஜப்தி செய்து அவற்றை ஏலம்விட்டு கிடைக்கும் தொகையை மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டிய தொகைக்கு வரவு வைத்துக்கொள்ள உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரரின் எதிர்உரையில், மோட்டார் வாகன இழப்பீட்டு அசல் மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணையை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதில் மேற்காணும் உத்தரவு என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையிலிருந்து ஜப்தி செய்ய கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களானது அவருக்கு சொந்தமானவை என்பதை அறிய முடிகிறது. அதுபோல் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை ஜப்தி செய்து கொள்ள முடியாது என்று ஆட்சேபணை தெரிவித்ததாக இல்லை என்றும் அறிய முடிகிறது. எனவே உத்தரவாணையில் கண்டுள்ள கடன் தொகையை மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் என்பதாலும். மேற்சொன்ன உத்தரவின் பலனை மனுதாரர்கள் அனுபவிக்கப்பட வேண்டியது தான் சட்ட நியதியான ஒன்று என்பதாலும், மனுதாரர்களின் மனுவில் கூறியுள்ள தொகையை எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்ய தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை கோட்டத்திற்கு சொந்தமான ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் ஏதாவது ஒரு பேருந்தை ஜப்தி செய்து, பின்பு இந்நீதிமன்றத்தின் மூலம் ஏலத்தில் விட்டும் அவ்வாறு ஏலத்தில் விடப்பட்டு கிடைக்கப்பெறும் தொகையை மனுதாரர்கள் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர் என்றும் இந்நீதிமன்றம் கருதி அதன்படியே இந்த பிரச்சனைக்கு தீர்வு

காணப்படுகிறது.

**முடிவில்** இம்மனு அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை கோட்டத்திற்கு சொந்தமான ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் ஏதாவது ஒரு பேருந்தை ஜப்தி செய்து, இந்நீதிமன்றத்தின் மூலம் ஏலத்தில் விடும் பொருட்டு ஜப்தி செய்ய உத்தரவிடப்படுகின்றது. ஜப்தி செய்ய வாய்தா 26.03.2026. படி செலுத்த கால அவகாசம் 2 வாரம். அழைக்க 27.03.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI Date: 2026.01.23 14:29:24 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI Digitally signed by T V MANI Date: 2026.01.23 14:29:29 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
E.P.No.9/2025 in MCOP.No.109/2021
**உத்தரவு நாள் – 23.01.2026**